# 9. யார் சிறந்தவர்?

ஒரு முறை மேலாண்மை மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி வகுப்பில் மிகவும் சுவாரசியமான ஒரு விவாதம் தொடங்கப்பட்டது யார் சிறந்தவர்? அனைத்தையும் அறிந்தவரா? அல்லது அறியாதவரா?

இந்தக் கேள்வி கேட்கப்பட்ட பொழுது வகுப்பில் உள்ளவர்கள் அனிச்சையாக அனைத்தும் அறிந்தவர் தாம் என்று பதில் கூறினர். ஆனால் இந்தப் பதில் ஒரு கற்பனாவாதமானது என்பது விரைவில் உணரப்பட்டது. தனக்கு எல்லாம் தெரியும் என்று நம்பும் நபர், முட்டாள்களின் சொர்க்கத்தில் வாழ்கிறார். "எல்லாவற்றையும் அறியாதவர்" சிறந்தவரா? இல்லை, அவர் முட்டாளாக இருப்பார். ஒருவேளை அனைத்தையும் அறியாத நபர், தமக்கு எல்லாம் தெரியும் என்பதை உணர்ந்தால் மட்டுமே சிறந்தது, ஏனெனில், அவர் தமது கடுமையான வரம்புகளை அறிந்திருப்பார் மற்றும் ஒரு குறிப்பிட்ட அறிவு தேவைப்படும் போதெல்லாம் தமது குறைபாட்டைப் போக்க முயல்வார். முக்கியமான விஷயம் என்னவென்றால், அந்த நபர் தேர்ந்தெடுக்கப்பட்ட துறையில் தன்னைவிட அதிகமாக அறிந்த ஒரு நபரையோ அல்லது நபர்களையோ அறிந்திருக்க வேண்டும்.

ஒருவரின் பணிப்பொறுப்புகளுக்குச் சிறப்பு அறிவு தேவைப்படக் கூடிய பல்வேறு துறைகளில் நிபுணர்களுடன் நெட்வொர்க்கிங் செய்வது என்பது மிகவும் முக்கியமான திறனாகப் பார்க்கப்படுகிறது. வணிக நிர்வாகத்தில் நெருக்கடியான சூழ்நிலையில் மட்டுமல்லாது பல்வேறு சூழ்நிலைகளில் பல துறை நிபுணர்களின் நிபுணத்துவ அறிவு தேவைப்படுகிறது.

இந்த நெட்வொர்க் வளத்தை உணர்வுப்பூர்வமாகவும் செயலுக்காகவும் உருவாக்குவது தொழில்முறை மற்றும் தொழில் முறை அல்லாத மேலாளர்களின் ஒரு முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும். இது தரும் நன்மை என்னவென்றால் நாம் அனைத்துத் துறைகளிலும் நம்மை நிபுணராகக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை ஆனால் தேவையான அளவு தகவல்களைப் பெறுவதற்குத் தொடர்புடைய கேள்விகளைக் கேட்கவும், நெட்வொர்க் தளத்தில் நிபுணருடன் ஈடுபடவும் போதுமான அளவு அறிந்திருக்க வேண்டும். நிபுணருக்குத் தேவையான அளவு விவரங்களில் மிகவும் சரியான மற்றும் துல்லியமான தகவலைக் கோருவதற்கு அவர்களின் தொழில்முறை குழுவும் உள்ளது.

நெட்வொர்க் ஆதாரம் என்பது நிபுணர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண்களின் பட்டியலைச் சேகரித்து வைப்பது மட்டுமன்று. நண்பர்களாகப் பதிலளிக்கக் கூடிய நபர்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் அதை வளர்த்துக் கொண்டவுடன், அனைத்து அறிவையும் பெற்று நிம்மதியாக இருப்பீர்கள், மேலும் “எல்லாவற்றையும் அறிந்து விட்டேன் என்ற சிந்தனையிலிருந்து மீண்டு விடுவீர்கள்" அதே நேரத்தில், கடமைகளை முழுமையாகவும், விரைவாகவும், திறமையாகவும் நிறைவேற்றுவதற்கு நீங்கள் போதுமான அளவு அறிவீர்கள்.